DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C No.187/2018

Prosecution side witness for P.W 10

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. இசக்கியப்பன் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24.10.2025.**

A1 to A3 are present.

<u>முதல்விசாரணை:-</u>

நான் தற்போது தூத்துக்குடி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் கிரேடு 1 பெஞ்ச் கிளார்க்காக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 2017 ஆம் வருடத்தில் தூத்துக்குடி நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் தலைமை எழுத்தராக பணிபுரிந்து வந்தேன். அப்போது தாளமுத்துநகர் காவல்நிலைய குற்ற எண். 2/2017 சட்டபிரிவுகள் 294 பி,, 307, 506 @ 302. 506(2) இதச @ 8(c) r/w 20(b)(ii)(A) NDP வழக்கில் கைப்பற்றப்பட்ட தடய சொத்துக்களான இரத்தம்பட்ட மண், இரத்தம்படாத மண், பலகை கட்டைகள் 3 துண்டுகள், சுமார் 500 கிராம் கஞ்சா பாலீதின் பையுடன் கைப்பற்றபட்டதை மாதிரிக்கு சுமார் 50 கிராம் காக்கி நிற பேப்பரில் சுற்றி SHO சீல் வைக்கப்பட்டது. மீதமுள்ள 450 கிராமை காக்கி நிற பேப்பரில் சுற்றி SHO சீல் வைக்கப்பட்டது. மேலும் கத்தி ஒன்றையும் படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதை நீதிபதி ஒப்புதல் பெற்று அதை நீதிமன்ற பாதுகாப்பிற்கு பி.ஆர்.எண்.26/2017 என எண் கொடுத்து நீதிமன்ற பாதுகாப்பிற்கு எடுத்தேன். அதன்பின்னர் இந்த வழக்கு சம்மந்தமாக தடய சொத்துக்களை இரசாயன பகுப்பாய்விற்கு அனுப்ப வேண்டி தாளமுத்துநகர் காவல்நிலைய ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை 01.12.2017 பெற்று நீதித்துறை நடுவர் ஒப்புதல் பெற்று நீதிமன்ற கடிதம் மூலம் காவலர் டேனியல்ராஜாசிங் என்பவர் மூலம் திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அதே 01.12.2017 அன்று அனுப்பி வைக்கப்பட்டது. அதற்காக ஆய்வாளர் வழங்கிய வேண்டுகோள் கடிதம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 11** ஆகும். நீதிமன்ற கடிதம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 12** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக இரத்தமாதிரிகளை இரசாயன பகுப்பாய்விற்கு

அனுப்ப வேண்டி தாளமுத்துநகர் காவல்நிலைய ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை 31.01.2018 பெற்று நீதித்துறை நடுவர் ஒப்புதல் பெற்று நீதிமன்ற கடிதம் மூலம் காவலர் டேனியல்ராஜாசிங் என்பவர் மூலம் திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அதே 01.02.2018 அன்று அனுப்பி வைக்கப்பட்டது. அதற்காக ஆய்வாளர் வழங்கிய வேண்டுகோள் கடிதம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 13** ஆகும். நீதிமன்ற கடிதம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 14** ஆகும். அதன்பின்னர் இந்த வழக்கு சம்மந்தமாக கைப்பற்றிய கஞ்சாவை அனுப்ப வேண்டி தாளமுத்துநகர் காவல்நிலைய ஆய்வாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை 31.01.2018 பெற்று நீதித்துறை நடுவர் ஒப்புதல் பெற்று நீதிமன்ற கடிதம் மூலம் காவலர் டேனியல்ராஜாசிங் என்பவர் மூலம் திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அதே 01.02.2018 அன்று அனுப்பி வைக்கப்பட்டது. அதற்காக ஆய்வாளர் வழங்கிய வேண்டுகோள் கடிதம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 15** ஆகும். நீதிமன்ற கடிதம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–16** ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)

நான் முதல்விசாரணையில் கூறியுள்ள விவரங்களை ஆய்வாளர் விசாரணையின்போது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C No.187/2018

Prosecution side witness for P.W 11

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. டேனியல் ராஜாசிங் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24.10.2025.**

A1 to A3 are present.

<u>முதல்விசாரணை:–</u>

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் உட்கோட்டம், எப்போதும்வென்றான் காவல்நிலையத்தில் தனிப்பிரிவு தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 2017 ஆம் வருடத்தில் தூத்துக்குடி மாவட்டம், தாளமுத்துநகர் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். அப்போது என்னுடைய காவலர் எண். 323 ஆகும். தாளமுத்துநகர் காவல்நிலைய குற்ற எண். 2/2017 சட்டபிரிவுகள் 294 பி,, 307, 506 @ 302. 506(2) இதச @ 8(c) r/w 20(b)(ii)(A) NDPS வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்கின் சொத்துக்களை மூடி முத்திரையிட்ட காகித பொட்டலம் ஒன்றும், மற்றொரு முத்திரையிட்ட காகித பொட்டலம், மற்றும் மூடி முத்திரையிட்ட காகித உறை ஆகியவற்றை தூத்துக்குடி நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திலிருந்து வேண்டுகோள் கடிதம் கொடுத்து நீதித்துறை நடுவர் கடிதம் மூலம் மேற்படி தடய சொத்துக்களையும், இரத்த மாதிரிகளையும் திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்து ஒப்பம் பெற்று நிலையம் வந்து அறிக்கை செய்தேன். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை (எதிரிகள்தரப்பில்)</u>

நான் சொன்ன நாள், நேரத்தில் மேற்சொன்ன பணியை செய்ததாக சொல்வது உண்மையல்ல என்றுசொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

| |
|---|
| Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct<br><br>II Additional District& Sessions Judge,<br>Thoothukudi. |

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C No.187/2018

Prosecution side witness for P.W 12

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. நிவேதா | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24.10.2025.**

A1 to A3 are present.

முதல்விசாரணை:-

நான் தற்போது தூத்துக்குடி மாவட்டம், தென்பாகம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 2017 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாவட்டம், தாளமுத்துநகர் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வந்தேன். அப்போது என்னுடைய காவலர் எண். 644 ஆகும். தாளமுத்துநகர் காவல்நிலைய குற்ற எண். 2/2017 சட்டபிரிவுகள் 294 பி,, 307, 506 @ 302. 506(2) இதச @ 8(c) r/w 20(b)(ii)(A) NDPS வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சங்கர்ராஜா என்பவரின் இறப்பு இன்டிமேசன்படி வழக்கின் சட்டபிரிவினை மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அடங்கிய தபாலினை காவல்நிலையத்திலிருந்து கடவுச்சீட்டு பெற்று கனம் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களிடம் 06.01.2017 ஆம் தேதி காலை 11.30 மணிக்கு ஒப்படைத்து ஒப்பம் பெற்று நிலையம் வந்து அறிக்கை செய்தேன். இது சம்மந்தமாக பணி ஒதுக்கப்பட்டு எனக்கு வழங்கிய கடவுச்சீட்டு நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ- 17** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

(எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை இல்லை என சொல்லப்பட்டது)

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.